# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி, B.A.,D.Com., B.L.,**
**வணக்கத்திற்குரிய மேயர்,**
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 4227 / 2013 / எம்சி. 8 நாள் : 17 .05.2013**

**அய்யா /அம்மா,**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்ற அவசரக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் **21.05.2013 செவ்வாய் கிழமை காலை 11.30 மணிக்கு** வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

**/ உண்மை நகல் /**

**மாமன்ற செயலாளர்**

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - மே 2013

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | இ). **தீர்மானத்திற்குரிய பொருள்** |
| **1** | சுகாதார பிரிவு - மாநகராட்சி பகுதிகளுக்குட்பட்ட தெருக்களில் சுற்றி திரியும் தெரு நாய்களை பிடிப்பதற்கு 2 எண்ணிக்கைகள் தெருநாய் பிடிக்கும் வாகனங்கள் வாங்குவது மற்றும் அவ்வாறு வாங்கும் பட்சத்தில் ஏற்படும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி கோர ஆணையரின் அனுமதி பெறப்பட்டதற்கு பின்னேற்பு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக. |
| **2** | பொறியியல் பிரிவு - மாநகராட்சி பகுதிகளில் சேகரமாகும் கோழிக்கழிவுகள், ஆட்டிறைச்சி மற்றும் மீன் இறைச்சி கழிவுகளை சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் கழிவு செய்யும் அமைப்பினை இம்மாநகராட்சியின் ஏதேனும் ஒரு தகுதி வாய்ந்த இடத்தில் இம்மாநகராட்சி நிதி மூலமோ அல்லது தனியார் (Public Private Partnership Mode) பங்களிப்புடனோ நிறுவி செயல்படுத்துதல் - விருப்ப கேட்பறிக்கை (Expression of Interest) கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **3** | பொறியியல் பிரிவு - அலுவலக பயன்பாட்டிற்காக ஆறு புதிய மஹேந்திரா பொலீரோ ஈப்புகளை DGS & D விலையில் வாங்கவும், பழைய ஆறு வாகனங்களை கழிவு செய்த பின்னர் அதற்கு பின்னேற்பு பெறவும், மாமன்றத்தின் அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **4** | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டம் – பில்லூர் அணையில் நிரேற்று கிணறு மற்றும் மோட்டார் அறையில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார்களை ஒரு வருட காலத்திற்கு இயக்கும் பணியினை மாநகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள முதல் அழைப்பில் மதிப்பீட்டு தொகைக்கும் 4.71% அதிகமாக பெறப்பட்டுள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது – மாமன்ற ஒப்புதல் சம்பந்தமாக. |
| **5** | நகரமைப்புப் பிரிவு - சாலையோரங்களில் கட்டிட இடிமானப் பொருள்கள் மற்றும் மண் ஆகியவை கொட்டப்படுவதற்கு பதிலாக அதிலிருந்து கட்டுமானத்திற்கு உபயோகப்படும் பொருள்களை தனியார் நிறுவனங்கள் மூலம் தயாரித்து விற்பனை செய்ய ஏலம் கோர மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |
| **6** | நகரமைப்பு பிரிவு – இரயில்வே திட்டப்பணிகள் – இரயில்வே கடவுகள் உள்ள மாநகராட்சி சாலைகளில் மேம்பாலம் கட்டும் பணி மேற்கொள்ள நெடுஞ்சாலை துறைக்கு மாநகராட்சி 8 சாலைகளை நிரந்தரமாக ஒப்படைப்பு செய்வது – வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் ஒப்புதல் பெற்று அரசுக்கு அனுப்பப்பட்ட பிரேரணைக்கு பின்னேற்பு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |
| **7** | நகரமைப்பு பிரிவு - காந்திபுரம் பகுதி சாலைகளில் மேம்பாலம் கட்டுதல் – பணி மேற்கொள்வதற்காக மாநகராட்சி சாலைகளை நெடுஞ்சாலைத் துறைக்கு 3 சாலைகளை நிரந்தரமாக ஒப்படைத்தல் – வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் ஒப்புதல் பெற்று அரசுக்கு அனுப்பப்பட்ட பிரேரணைக்கு பின்னேற்பு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |
| **8** | பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகரத்தில் 10 “அம்மா உணவகங்கள்'' திறப்பது – மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக. |

| | |
|---|---|
| **9** | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் – விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணி – தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஆய்வுக்கட்டணம் வழங்குதல் – மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |
| **10** | பணியமைப்பு – கோவை மாநகராட்சி – திரு. என். முருகேசன், துப்புரவு ஆய்வாளர், தூத்துக்குடி மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒரு வழி பணி மாறுதல் கோருவது – தொடர்பாக. |
| **11** | பொறியியல் பிரிவு - கோயம்புத்துார் மாநகராட்ச ிபள்ளிகள் - மதிய உணவு வழங்குதல் - சூரிய அடுப்பு நிறுவுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **12** | பொறியியல் பிரிவு - கோயம்புத்துார் மாநகராட்சி 5 இடங்களில் அம்மா உணவகம் அமைக்க கட்டிடங்களை மாற்றியமைத்தல் - மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளுதல் மற்றும் நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **13** | பொறியியல் பிரிவு - சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினா் நிதியின்கீழ் 7 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |

**நன்றியுரை**

**அ) <u>திருக்குறள்</u>**

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

**(குறள் -96)**

<u>விளக்கம்</u>

நல்ல செயல்களை ஆற்றும் வழிகளை இனிமையாகச் சொன்னால் தீமைகள் நீங்கி அறவினைகள் பெருகும்.

**திருவள்ளுவர்.**

--------------------------------------------------------------------------------

ஆ) **<u>தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி</u>**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## பொருள் எண் 1

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – சுகாதார பிரிவு - மாநகராட்சி பகுதிகளுக்குட்பட்ட தெருக்களில் சுற்றி திரியும் தெரு நாய்களை பிடிப்பதற்கு 2 எண்ணிக்கைகள் தெரு நாய் பிடிக்கும் வாகனங்கள் வாங்குவது – தொடர்பாக.

பார்வை :
1) அரசு ஆணை (D) எண் 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்:05-04-2013.
2) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் :43441/2012/J2 நாள்:03-05-2013.

----------------

பார்வை 1-ல் கண்ட அரசாணையில் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் தெருக்களில் சுற்றி திரியும் தெரு நாய்களை பிடிப்பதற்கு 60 எண்ணிக்கை வாகனங்கள் வாங்க ரூ.300.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பார்வை 2ல் கண்ட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகளில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 2 எண்ணிக்கையிலான தெரு நாய் பிடிக்கும் வாகனங்கள் வாங்குவதற்கு ரூ.10.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் மேற்படி வாகனங்களை DGS&D விலையிலோ அல்லது தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998-ல் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளை பின்பற்றி வாங்கி கொள்ளுமாறு தெரிவித்துள்ளார். மேலும் அவ்வாறு புதியதாக வாங்கப்படும் வாகனங்களை மாநகராட்சியில் தகுதி வாய்ந்த பணியாளர்களை கொண்டோ அல்லது டெக்ஸ்கோ பணியாளரை கொண்டோ இயக்குமாறு தெரிவித்துள்ளார். டெக்ஸ்கோ பணியாளர்கள் இல்லாத பட்சத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமித்து இயக்குமாறு தெரிவித்துள்ளார்.

மேற்கூறிய தெரு நாய் பிடிக்கும் வாகனம் ஒன்றினை கடந்த 19-02-2013 ல் தாம்பரம் நகராட்சியில் ரூ.7,68,390/- செலவினத்தில் வாங்கப்பட்டது தெரிய வருகிறது. இரண்டு எண்ணிக்கையிலான நாய் பிடிக்கும் வாகனங்கள் வாங்க தோராயமாக ரூ.16,00,000/- (வாகன பதிவு செலவு, காப்பீடு தொகை செலவு, சாலை வரி செலுத்துதல் இன்னும் பல) ஆகும். தற்பொழுது அரசு ஒதுக்கீடு செய்துள்ள ரூ.10.00 லட்சம் நிதியில் ஒரு எண்ணிக்கையிலான வாகனம் மட்டுமே வாங்க இயலும்.

எனவே இரண்டு எண்ணிக்கையிலான நாய் பிடிக்கும் வாகனங்களை ரூ.16,00,000/- செலவினத்தில் வாங்குவதற்கும் அவ்வாறு வாங்கும் பட்சத்தில் ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.6,00,000/- ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோர ஆணையரின் அனுமதி பெறப்பட்டதற்கு பின்னேற்பு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்:4369/2013/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 44 நாள் 21.05.2013</u>**

பொருள் அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 2

கோயம்புத்தூர் மாநகராட்சியில் தனியார் (Public Private Partnership Mode) பங்களிப்புடன் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென தி/ள் BEIL-UPL (Consortium), மும்பை கூட்டு நிறுவனத்துடன் இம்மாநகராட்சி கடந்த 19-11-2007-ல் அனுகூல ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளது. இம்மாநகராட்சியின் பணியானது அன்றாடம் சேகரம் செய்யப்படும் குப்பைகளை மேற்படி தனியார் நிறுவனத்தினரால் கட்டி இயக்கி பராமரிக்கப்பட்டு வரும் குப்பை மாற்று நிலையங்களுக்கு கொணர்ந்து சேர்க்கப்பட்டு அவ்வாறு சேகரிக்கப்பட்ட குப்பைகளை அந்நிறுவனத்தினரால் இரண்டாம் கட்டமாக அகற்றப்பட்டு வெள்ளலூர் குப்பைக்கிடங்கு அமைந்துள்ள இடத்தில் அந்நிறுவனத்தினரால் நிறுவப்பட்டுள்ள இயற்கை உரம் தயாரிக்கும் நிலையத்திற்கு கொணர்ந்து சேர்க்கப்பட்டு பல்வேறு நிலைகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பை மற்றும் எதுவுமே செய்ய இயலாத குப்பைகளென தரம் பிரித்து மக்கும் குப்பைகளை ஏரோபிக் டைஜஷன் (Aerobic Digestion) முறையில் இயற்கை உரமாக மாற்றியமைக்கப்படுகிறது. மக்காத மற்றும் எதுவுமே செய்ய இயலாத குப்பைகளை நல நிலை நிரப்பல் அமைப்பில் கொட்டப்பட்டு சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் மூடி கழிவு செய்யப்பட்டு வருகிறது.

தற்சமயம் இம்மாநகராட்சியுடன் 3 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள் மற்றும் ஒரு ஊராட்சி ஆகியவைகள் இணைக்கப்பட்டுள்ளதால் இம்மாநகராட்சியில் தினசரி சேகரமாகும் திடக்கழிவின் அளவு நாளொன்றிற்கு சுமார் 250.00 மெட்ரிக் டன் எடையாக கூடியுள்ளது. மாநகராட்சி எல்லை விரிவாக்கத்தினால் தற்சமயம் இம்மாநகராட்சி மேற்கூறிய தனியார் நிறுவனத்திற்கு நாளொன்றிற்கு சுமார் 850.00 மெட்ரிக் டன் எடையுள்ள தரம் பிரிக்கப்படாத திடக்கழிவுகளை சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் கழிவு செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

அவ்வாறு தரம் பிரிக்கப்படாத திடக்கழிவுகளில் இம்மாநகராட்சி பகுதிகளில் சேகரமாகும் கோழிக்கழிவுகள், ஆட்டிறைச்சி மற்றும் மீன் இறைச்சி கழிவுகள் தரம் பிரிக்கப்படாத நிலையில் ஏனைய திடக்கழிவுகளுடன் கலப்பதால் சுகாதார சீர்கேடு ஏற்படுத்துவதுடன் சுற்றுச்சூழல் பெரிதும் மாசுபடுகிறது. மேற்படி கோழிக்கழிவுகள், ஆட்டிறைச்சி மற்றும் மீன் இறைச்சி கழிவுகள் சுற்றுச்சூழல் பாதுகாப்புச்சட்டத்தில் மருத்துவ கழிவுகளின் இரண்டாம் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே அவற்றினை மருத்துவ கழிவுகளை தரம் பிரித்து சேகரம் செய்து சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் கழிவு செய்திட வேண்டும்.

எனவே இம்மாநகராட்சி பகுதிகளில் சேகரமாகும் கோழிக்கழிவுகள், ஆட்டிறைச்சி மற்றும் மீன் இறைச்சி கழிவுகளை இன்சினரேஷன் (Incineration Technology) தொழில்நுட்ப முறையில் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தினரால் நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளை பின்பற்றி சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் தரம் பிரித்து சேகரம் செய்து சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் கழிவு செய்யும் அமைப்பினை இம்மாநகராட்சியின் ஏதேனும் ஒரு தகுதி வாய்ந்த இடத்தில் இம்மாநகராட்சி நிதி மூலமோ அல்லது தனியார் (Public Private Partnership Mode) பங்களிப்புடனோ நிறுவி செயல்படுத்தவும் அத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு விருப்ப கேட்பறிக்கை (Expression of Interest) கோரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்:4464/2013/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 45 நாள் 21.05.2013**

பொருள் அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

------------------------------------------------------------------------------------------------------------

**பொருள் எண் 3**

கோயம்புத்தூர் மாநகராட்சி பொறியியல் பிரிவு அலுவலர்கள் பயன்பாட்டிற்காக ஆறு எண்ணிக்கையிலான புதிய இயக்கூர்திகளை வாங்குவதற்கு 2012–13 ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் 3107 இலகு ரக வாகனங்கள் என்ற தலைப்பில் ரூ.50,00,000/–நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்படி மாமன்ற தீர்மான எண் 194 நாள் 16/08/2012 அன்று மாமன்றத்தால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாநகராட்சி அதிகாரிகளால் அலுவலக பணிகளுக்கு பயன்பாட்டில் உள்ள வாகனங்களில், ஆறு வாகனங்களில் பெரும் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால், இவ்வாகனங்களை கழிவு செய்து புதிதாக ஆறு எண்ணிக்கைகள் மஹேந்திரா பொலீரோ ஈப்புகள் வாங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மாநகராட்சி எல்லை விரிவாக்கத்திற்குப்பின்னர் மாநகராட்சியின் பரப்பளவு 257.36 ச.கி.மீட்டராக அதிகரித்து உள்ளது. இதனால் உயர் அலுவலர்கள் மாநகராட்சியின் அனைத்து பகுதிகளுக்கும் மிகவும் பழுதடைந்துள்ள நிலையிலுள்ள வாகனங்களில் சென்று ஆய்வு பணிகள் மேற்கொள்வது மிகவும் சிரமமாக உள்ளதால் புதிதாக ஆறு ஆய்வு வாகனங்கள் வாங்குவது அத்தியாவசியமாகிறது.

மேலும், தற்போது பயன்பாட்டில் உள்ள பெரும் பழுதுகளுடன் உள்ள ஆறு பழைய வாகனங்களை கழிவு செய்வதற்கு தொடர் மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே அவசர அவசியம் கருதி எற்கனவே மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை கருத்தில் கொண்டு ஆறு புதிய மஹேந்திரா பொலீரோ ஈப்புகளை DGS & D விலையில் வாங்கவும், பழைய ஆறு வாகனங்களை கழிவு செய்த பின்னர் அதற்கு பின்னேற்பு பெறவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு: **அனும□□கலா□** ந.க.எண். 957/2005/எம்..டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 46 நாள் 21.05.2013**

பொருள் அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

------------------------------------------------------------------------------------------------------------

**பொருள் எண் 4**

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டம் – பில்லூர் அணையில் நிரேற்று கிணறு மற்றும் மோட்டார் அறையில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார்களை ஒரு வருட காலத்திற்கு இயக்கும் பணியினை மாநகராட்சி குடிநீர் நிதியின்கீழ் மேற்கொள்ள முதல் அழைப்பில் மதிப்பீட்டு தொகைக்கும் 4.71% அதிகமாக பெறப்பட்டுள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது – சம்பந்தமாக.

–––––

கோயம்புத்தூர் மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பில்லூர் II-வது தனிக்குடிநீர் திட்டத்தில், சிப்பம் I பணியான பில்லூர் அணைப்பகுதியின் கரை பகுதியில், செய்து முடிக்கப்பட்ட நீர் சேகரிப்பு கிணறு மற்றும் மோட்டார் அறையில் மோட்டார்கள், பம்புசெட்டுகள், டிரான்ஸ்பார்மர் மற்றும் இதர இயந்திரங்களை இயக்கும் பணி தி/ள். மெகா இன்ஜினியரிங் அண்டு இன்ப்ராஸ்ட்ரெக்சர்ஸ் லிட், ஹைதராபாத் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. பணிகள் முடிக்கப்பட்டு, மேற்படி மோட்டார்கள் இயக்குவதற்கு அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணியில் ஒரு வருட காலம் பராமரிக்க மட்டும் ஒப்பந்தத்தில் வழிவகை செய்யப்பட்டு உள்ளது.

எனவே, பில்லூர் அணையில் நிரேற்று கிணறு மற்றும் மோட்டார் அறையில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார்களை ஒரு வருட காலத்திற்கு இயக்கும் பணியினை மாநகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 22,10,000/–க்கு பணிக்குழு தீர்மான எண். 71, நாள். 22.01.2013 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தொழில்நுட்ப அனுமதி 11.02.2013–ல் பெறப்பட்டது. முதல் ஒப்பந்த அழைப்பான 15.03.2013 ல் இரண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி வழங்கியது. மேற்படி இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய தி/ள். கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ், கோவை நிறுவனத்திடம் விலைகுறைப்பு செய்திட கேட்டுக்கொள்ளப்பட்டதில், மேற்படி நிறுவனம் கொடுத்த விலைகுறைப்பு விபரம் பின்வருமாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | பில்லூர் அணையில் நிரேற்று கிணறு மற்றும் மோட்டார் அறையில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார்களை இயக்கும் பணி | 21,84,999.96 | தி/ள். மகாலட்சுமி அன் கோ, கோவை | 2511000.00 | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 14.92% சதவீதம் அதிகம் |
| | | | தி/ள். கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ், கோவை | 2292000.00<br><br>முதல் விலை குறைப்பு நாள் 19.03.2013 ரூ.2000/–<br>இரண்டாவது விலை குறைப்பு நாள் 22.03.2013 ரூ 2000/– | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 4.90% சதவீதம் அதிகம்<br>ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 4.80% சதவீதம் அதிகம்<br>**ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 4.71% சதவீதம் அதிகம்** |

முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகைக்கும் 4.71% அதிகமாக பெறப்பட்டுள்ள மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –மேற்படி பணிக்கு முதல் ஒப்பந்த அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரிய விலை விகிதத்திற்கு 4.71% கூடுதலான விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள தி/ள். கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ், கோவை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். : 1964 / 13 / ஜே.என்5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 47 நாள் 21.05.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 5

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்புப் பிரிவு - சாலையோரங்களில் கட்டிட இடிமானப் பொருள்கள் மற்றும் மண் ஆகியவை கொட்டப்படுவதற்கு பதிலாக அதிலிருந்து கட்டுமானத்திற்கு உபயோகப்படும் பொருள்களை தனியார் நிறுவனங்கள் மூலம் தயாரித்து விற்பனை செய்ய ஏலம் கோர மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பல பகுதிகளில் கட்டிட இடிமான பொருள்கள் மற்றும் மண் ஆகியவை சாலை ஓரங்களிலும், குளக்கரையிலும் கொட்டப்பட்டு போக்குவரத்திற்கு இடையூறும், சுகாதாரக் கேடும் ஏற்பட்டு வருகிறது. புனே, டில்லி போன்ற நகரங்களில் கட்டிட இடிமானப் பொருள்கள் தனியார் நிறுவனம் எடுத்து அதிலிருந்து கட்டுமானத்திற்கு உபயோகப்படும் பொருள்களை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். இந்நடைமுறையை நமது மாநகராட்சியும் பின்பற்ற இதற்கான செயல்திட்டம் கேட்டுப்பெற EOI மூலம் ஏலம் கோர மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் 4467/2013/ எம்.எச். 5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 48 நாள் 21.05.2013**

பொருள் அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 6

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்பு பிரிவு – இரயில்வே திட்டப்பணிகள் – இரயில்வே கடவுகள் உள்ள மாநகராட்சி சாலைகளில் மேம்பாலம் கட்டும் பணி மேற்கொள்ள நெடுஞ்சாலை துறைக்கு மாநகராட்சி சாலைகளை நிரந்தரமாக ஒப்படைப்பு செய்வது – தொடர்பாக.

**பார்வை:** 1.மாமன்ற தீர்மானம் எண்.183, நாள்.29.12.2011.
2.மாமன்ற தீர்மானம் எண்.65, நாள்.01.06.2012.
3.மாமன்ற தீர்மானம் எண்.338, நாள்.31.01.2013.
4.அரசு துணைச் செயலாளர், ந.நி.(ம).கு.வ.துறை அவர்களின் நே.மு.க.எண்.10454/எம்.சி.II/2013-1, நாள்.08.05.2013.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் இரயில்வே கடவுகள் உள்ள கீழ்கண்ட மாநகராட்சிக்கு சொந்தமான சாலைகளை மேம்பாலம் அமைக்கும் பணிக்காக அரசின் பின்னேற்பு எதிர்பார்த்து பணி துவங்க அரசால் தெரிவிக்கப்படும் நிபந்தனைக்குட்பட்டு அவசர அவசியத்தை முன்னிட்டு நெடுஞ்சாலைத் துறைக்கு மாநகராட்சி சாலைகளில் பணி மேற்கொள்ள தற்காலிகமாக ஒப்படைப்பு செய்யவும் பணி முடிவடைந்த பின்னர் சாலைகளை உடன் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்ற முன் நிபந்தனையுடன் முன்அனுமதி வழங்கி பார்வை 1 முதல் 3 வரையிலான மாமன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. தீர்மானங்களின் அடிப்படையில் கீழ்கண்ட சாலைகள் அரசின் பின்னேற்பு எதிர்பார்த்து பணி மேற்கொள்ள அரசால் தெரிவிக்கப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு பணி முடிவடைந்த பின்னர் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | மேம்பாலம் அமையவுள்ள இடம் | இடத்தின் பரப்பளவு |
|---|---|---|
| 1. | தண்ணீர் பந்தல் ரோடு (இரயில்வே கடவு எண்.6.)<br>விளாங்குறிச்சி ரோடு “S” வளைவு முதல் அவினாசி சாலை வரை | 1140 மீ |
| 2. | திருச்சி சாலை (இரயில்வே கடவு எண்.5.)<br>திருச்சி சாலை முதல் நீலிக்கோணாம்பாளையம் சாலை நீலியம்மன்கோவில் வரை | 1602 மீ |
| 3. | விளாங்குறிச்சி சாலை (இரயில்வே கடவு எண்.8.)<br>" S” வளைவு முதல் அவினாசி சாலை வரை | 1668 மீ |

| | | |
|---|---|---|
| 4. | ரத்தினபுரி சங்கனூர் சாலை (இரயில்வே கடவு எண்.11.)<br>சங்கனூர் பள்ளம் முதல் சங்கனூர் பிரதான சாலை வரை | 1050 மீ |
| 5. | காந்திஜி சாலை (இரயில்வே கடவு எண்.13.)<br>சங்கனூர் பள்ளம் முதல் கண்ணப்பன் நகர் வரை | 895 மீ |
| 6. | சிங்காநல்லூர் வெள்ளலூர் சாலை (இரயில்வே கடவு எண்.46.)<br>திருச்சி சாலை முதல் நொய்யல் சாலை வரை | 1880 மீ |
| 7. | இருகூர் சாலை (இரயில்வே கடவு எண்.2.)<br>திருச்சி சாலை இருகூர் செல்லும் மாநகராட்சி எல்லை வரை | 1980 மீ |
| 8. | கோயம்புத்தூர் இருகூர் இரயில் நிலையங்களுக்கிடையில்<br>(இரயில்வே கடவு எண்.3.)<br>ராமச்சந்திரா தெரு (மாநகராட்சி சாலை) கி.மீ.0/4 ல் மேம்பாலம் கட்டுதல் | - |

பார்வை 2ல் காண் அரசு நேர்முக கடிதத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணிகளை விரைந்து முடிக்க மாநகராட்சி சாலைகளை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்க தெரிவித்தும் தவறும் பட்சத்தில் மேம்பாலம் கட்டும் பணிக்கான 50% திட்ட செலவினை மாநகராட்சி ஏற்க நேரும் எனத் தெரிவித்தும் இதனால் மாநகராட்சிக்கு தேவையில்லாத கூடுதல் நிதி சுமை ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரசு கடிதத்தில் தெரிவித்துள்ளதன் அடிப்படையில், மேற்படி மாநகராட்சி சாலைகளை ரயில்வே மேம்பாலம் கட்டும் பணி விரைவில் துவங்குவதற்கு மாநகராட்சி சாலைகளில் பணி மேற்கொள்ள நிரந்தரமாக ஒப்படைப்பு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டியும், மேற்படி பொருள் தொடர்பாக அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் ஒப்புதல் பெற்று அரசுக்கு அனுப்பப்பட்ட பிரேரணைக்கு பின்னேற்பு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்.41101 /2007/எம்.எச்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 49 நாள் 21.05.2013</u>**

மேம்பாலம் கட்டும் பணிக்காக மாநகராட்சி சாலைகளை நெடுஞ்சாலைத்துறைக்கு நிரந்தரமாக ஒப்படைக்க அரசுக்கு பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 7**

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி - நகரமைப்பு பிரிவு - காந்திபுரம் பகுதி சாலைகளில் மேம்பாலம் கட்டுதல் – பணி மேற்கொள்வதற்காக மாநகராட்சி சாலைகளை நெடுஞ்சாலைத் துறைக்கு மாமன்ற தீர்மானத்தின்படி தற்காலிகமாக ஒப்படைத்தது – சாலைகளை நிரந்தரமாக ஒப்படைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

**பார்வை:** 1.மாமன்ற தீர்மான எண்.256, நாள்.25.10.2012.
2. தலைமைப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, சென்னை அவர்களின் கடித எண்.1448/சாலை3/2012, நாள்.10.02.2013.
3.அரசு துணைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் நேமுக.எண்.10454/எம்.சி.2/2013-1, நாள்.08.05.2013.

********

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட காந்திபுரம் பகுதி சாலைகளில், மேம்பாலம் கட்டும் பணி மேற்கொள்ள கீழ்கண்ட மூன்று சாலைகளை. மேம்பாலப் பணி நிறைவுபெற்றவுடன் பொது மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் சாலைகளை நல்ல முறையில் அமைத்து மீண்டும் மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் தற்காலிகமாக நெடுஞ்சாலைத்துறைக்கு ஒப்படைக்க பார்வை 1ல் காண் மாமன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நெடுஞ்சாலைத்துறைக்கு தற்காலிகமாக ஒப்படைப்பு செய்து கடிதம் அனுப்பப்பட்டது. இதனை தொடர்ந்து பார்வை 2ல் காண் கடிதத்தில் நெடுஞ்சாலை துறை 2001-ன் சட்டப்படி, கீழ்கண்ட 3 சாலைப் பகுதிகளையும் இத்துறைக்கு நிரந்தரமாக ஒப்படைத்தால் மட்டுமே சம்பந்தப்பட்ட இடங்களில் மேம்பாலம் கட்ட இயலும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பார்வை 3ல் காண் கடிதத்தில், மேம்பாலங்கள் கட்டும் பணிக்கு நெடுஞ்சாலை துறைக்கு உடன் மாநகராட்சி சாலைகளை ஒப்படைக்குமாறும், தவறும் பட்சத்தில் 50 சதவீத திட்ட செலவை மாநகராட்சி ஏற்க நேரிடும் எனவும் இதனால் மாநகராட்சிக்கு கூடுதல் நிதிச் சுமை எற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | மேம்பாலம் அமையவுள்ள சாலை | சாலையின் நீளம் |
|---|---|---|
| 1. | வ.உ.சி பார்க் சாலை (300 மீ)<br>டாக்டர். நஞ்சப்பா சாலையிலிருந்து 300 மீ வரை. | 300 மீ |
| 2. | நூறடி சாலை - ஜி.பி சந்திப்பிலிருந்து 300 மீ வரை<br>(காந்திபுரம் 3-ம் வீதி சந்திப்பு வரை) | 300 மீ |
| 3. | சின்னசாமி நாயுடு சாலை (300 மீ)<br>ஜி.பி சந்திப்பு முதல் 300 மீ. வரை. | 300 மீ |

எனவே, நெடுஞ்சாலை துறை கேட்டுக் கொண்டதன் பேரிலும், அரசு கடிதத்தில் தெரிவித்துள்ளதன்அடிப்படையிலும், மேற்படி சாலைகளை காந்திபுரம் பகுதி மேம்பாலம் பணிக்காக நிரந்தரமாக ஒப்படைப்பு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டியும், மேற்படி பொருள் தொடர்பாக அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் ஒப்புதல் பெற்று அரசுக்கு அனுப்பப்பட்ட பிரேரணைக்கு பின்னேற்பு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 4755/2012/எ□எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 50 நாள் 21.05.2013**

மேம்பாலம் கட்டும் பணிக்காக மாநகராட்சி சாலைகளை நெடுஞ்சாலைத்துறைக்கு நிரந்தரமாக ஒப்படைக்க அரசுக்கு பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 8

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகரத்தில் 10 "அம்மா உணவகங்கள்" திறப்பது – மாமன்றத்தில் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

******

கடந்த 25.04.2013 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் தீர்மான எண் 40–ன் படி கோயம்புத்தூர் மாநகராட்சியில் 5 "அம்மா உணவகங்கள்" துவங்க மாமன்றம் அனுமதி வழங்கி தீர்மானம் இயற்றப்பட்டது. அதன்பின்னர் முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் ஒவ்வொரு மாநகராட்சியிலும் 10 குறைந்த விலை உணவகங்கள் திறக்கப்படும் என அறிவித்துள்ளார்கள்.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் கீழ்க்கண்ட 10 இடங்களில் "அம்மா உணவகங்கள்" திறக்க ஏற்பாடுகள் நடை பெற்று வருகின்றது.

| | |
|---|---|
| 1 | சிங்காநல்லூர் பேருந்து நிலைய உணவகம் |
| 2 | மாநகராட்சி கட்டிடம் , மலரங்காடி ஏல அரங்கம் |
| 3 | மணியகாரன்பாளையம் |
| 4 | மாநகராட்சி அலுவலக வளாகம், குறிச்சி. |
| 5 | மாநகராட்சி கட்டிடம் , 80 அடி ரோடு, இராமநாதபுரம். |
| 6 | திருமால் வீதி திருமண மண்டபம் |
| 7 | புதிய பேருந்து நிலையம், மேட்டுப்பாளையம் ரோடு |
| 8 | மசக்காளிபாளையம் பள்ளி வளாகம் |
| 9 | அம்மன் நகர் – சரவணம்பட்டி |
| 10 | குனியமுத்தூர் |

இதன்படி 10 எண்ணிக்கையில் அம்மா உணவகங்கள் நடத்த ஆண்டொன்றுக்கு கீழ்க்கண்டவாறு செலவினம் ஏற்படும்

| வ. எண் | உணவு பொருளின் பெயர் | நபர்களின் எண்ணிக்கை | மொத்த அளவு | அடக்க விலை (ஒரு இட்லி ரூ.3.64, ஒரு சாம்பார் சாதம் ரூ.14.73 மற்றும் ஒரு தயிர் சாதம் ரூ.7.44 என்ற விலை விகிதத்தில்) ரூ. | விற்பனை விலை (ஒரு இட்லி ரூ.1./, ஒரு சாம்பார் சாதம் ரூ.5/– மற்றும் ஒரு தயிர் சாதம் ரூ.3/– என்ற விலை விகிதத்தில்) ரூ. | பற்றாக் குறை (ரூ.) | பற்றாக் குறை (1 இட்லி சாம்பார்/ ஒரு சாம்பார் சாதம். ஒரு தயிர் சாதம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | இட்லி, சாம்பார் | 300 | 1200 | 4368 | 1200 | 3168 | 2.64 |
| 2. | சாம்பார் சாதம் | 300 | 300 | 4419 | 1500 | 2919 | 9.73 |
| 3. | தயிர் சாதம் | 300 | 300 | 2232 | 900 | 1332 | 4.44 |
| | மொத்தம் | | | | | 7419 | |

| | |
|---|---|
| ஒரு உணவகத்திற்கு ஒரு நாளைக்கு ஏற்படும் பற்றாக்குறை தொகை | ரூ. 7,419/– |
| ஒரு உணவகத்திற்கு ஒரு மாதத்திற்கு ஏற்படும் பற்றாக்குறை தொகை | ரூ. 2,22,570/– |
| ஒரு உணவகத்திற்கு 365 நாட்களுக்கு ஏற்படும் பற்றாக்குறை தொகை | ரூ. 27,07,935/– |
| 10 உணவகங்களுக்கு, 365 நாட்களுக்கான (ஒரு வருடத்திற்கு) மொத்த பற்றாக்குறை தொகை | ரூ. 2,70,79,350/– |

இம்மாநகராட்சிகளில் 10 குறைந்த விலை உணவகங்கள் இயக்கப்படுமானால், ஆண்டொன்றுக்கு ரூ. 2.71 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும்.

இந்த ரூ.2.71 கோடி கூடுதல் செலவீனத்தை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், இந்த முன்மொழிவினை அரசிற்கு பரிந்துரை செய்து அரசாணையினைப் பெற்று வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

புதிதாக கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் 10 அம்மா உணவகங்கள் திறக்கவும், அரசாணையின்படி உணவகங்களை நடத்தவும், அரசுக்கு அனுப்பப்பட்ட முன்மொழிவுக்கு பின்னேற்பு கோரியும், இதற்கான செலவினத்திற்கு மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம் எண். 3265/2013/ எம்.இ.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 51 நாள் 21.05.2013**

பொருள் அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 9**

| | |
|---|---|
| பொருள்: | கோயம்புத்தூர் மாநகராட்சி – எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் – விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணி – தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஆய்வுக்கட்டணம் வழங்குதல் – அனுமதி கோருதல் – தொடர்பாக |

கோயம்புத்தூர் மாநகராட்சியின் எல்லை விரிவாக்கத்திற்கு முன்பிருந்த 72 வார்டுகளுக்குட்பட்ட, பாதாள சாக்கடை திட்டம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில், பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக மேற்கொள்ள மாமன்றம் தனது தீர்மானம் எண். 61, நாள்: 10.08.2011–ல் ஒப்புதல் வழங்கியதையடுத்து, மேற்படி வாரியத்தால் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள மூன்று நகராட்சிகள் மற்றும் ஏழு நகர பஞ்சாயத்துகளுக்குட்பட்ட (தற்போது கோவை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டது) பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தின் செயல்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு பணிக்கான கட்டணமாக ரூ. 60.37 இலட்சம் செலவினம் ஏற்பட்டதாகவும், அத்தொகையில் ரூ. 43.49 இலட்சம் மேற்குறிப்பிட்ட உள்ளாட்சி அமைப்புகளால் ஏற்கனவே செலுத்தப்பட்டு விட்டதால் மீதம் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ. 16.88 இலட்சம் மற்றும் விரிவாக்கத்திற்கு முன்பிருந்த மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் விடுபட்ட பகுதிகள், புதிதாக இணைக்கப்பட்ட விளாங்குறிச்சி கிராம பஞ்சாயத்துக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கான கட்டணம் ரூ. 73.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 89.88 இலட்சத்தினை (ரூ. 16.88 இலட்சம்+ரூ. 73.00 இலட்சம்) கட்டணத் தொகையினை செலுத்தக் கோரி நிர்வாகப்பொறியாளர், த.கு.வ.வா. கோவை அவர்களால் தனது அலுவலக கடிதம் எண்.F.UGSS/CBE.Corpn/DB/2013/ நாள்:08.04.2013-ல் கேட்பு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையினை தயாரிக்க ஏற்படும் செலவினத்தை அரசிடமிருந்து, "திட்ட அறிக்கை தயாரிப்பு (Financial Assistance from the Project Preparation Facility - PPF) " நிதியிலிருந்து பெறுவதற்கு அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக கடித ந.க. எண். 12069/06/ஜேஎன்4, 13.08.2013–ந் தேதியில் முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, பரிசீலனையில் உள்ளது. அரசின் அனுமதி பெற்று மேற்படி ஆய்வுக் கட்டணத்தொகையை விடுவிக்க காலதாமதம் ஏற்படும் என்பதால், தற்போது தற்காலிக ஏற்பாடாக, ஆய்வுக்கட்டணத்தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும், அரசிடமிருந்து தொகை விடுவிக்கப்பட்டவுடன் மேற்படி தொகையினை மாநகராட்சி நிதியில் வரவு வைத்து, ஈடு செய்து கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி கோரி மாமன்றத்திற்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

அ) எல்லை விரிவாக்கத்திற்கு முன்பிருந்த மாநகராட்சியின் விடுபட்ட பகுதிகள் மற்றும் மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வரும் விரிவான திட்ட அறிக்கைக்கான ஆய்வு கட்டணத்தொகை ரூ. 89.88 இலட்சத்தினை, அரசிடமிருந்து "திட்ட அறிக்கை தயாரிப்பு (Financial Assistance from the Project Preparation Facility - PPF) " நிதியிலிருந்து கிடைக்கப் பெறும் வரை தற்காலிக ஏற்பாடாக மாநகராட்சி பொது நிதியிலிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வழங்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) அரசிடமிருந்து நிதி விடுவிக்கப்பட்டவுடன் மேற்படி ஆய்வு கட்டணத் தொகை ரூ. 89.88இலட்சம் நிதியினை மாநகராட்சி பொது நிதியில் சேர்த்துக் கொள்ள அனுமதி வழங்கலாம்.

ந.க. எண். 12069/06/ஜேஎன்.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 52 நாள் 21.05.2013</u>**

அலுவலகக் குறிப்பு அ-விற்கு ஒப்புதல் வழங்கியும், ஆ-விற்கு அனுமதி வழங்கியும் தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 10**

**பொருள்:**பணியமைப்பு – கோவை மாநகராட்சி – திரு. என். முருகேசன், துப்புரவு ஆய்வாளர், தூத்துக்குடி மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒரு வழி பணி மாறுதல் கோருவது – தொடர்பாக.

--------

தூத்துக்குடி மாநகராட்சியில் துப்புரவு ஆய்வாளராக பணிபுரியும் திரு. என். முருகேசன் அவர்கள் தனது 12.02.2013 மற்றும் 18.03.2013ம் தேதிய விண்ணப்பங்களில் குடும்ப சூழ்நிலை காரணமாக கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒரு வழி பணிமாறுதல் வழங்குமாறு கேட்டுள்ளார்.

தூத்துக்குடி மாமன்ற தீர்மான எண். 22 நாள் 06.02.2013ல் மேற்படியாரை ஒரு வழி மாறுதலில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு துப்புரவு ஆய்வாளராக பணியிட மாற்றம் செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டு தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.எச்.1/5901/2012 நாள் 28.03.2013ன் மூலமாக மன்ற தீர்மான நகல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இம்மாநகராட்சியில் தற்போது 2 துப்புரவு ஆய்வாளர் பணியிடங்கள் காலியாக உள்ளது. மேற்கண்ட இடத்திற்கு திரு. என். முருகேசன், துப்புரவு ஆய்வாளர், தூத்துக்குடி மாநகராட்சி அவர்களை ஒரு வழி மாறுதல் மூலம் கோயம்புத்தூர் மாநகராட்சியில் சேர்த்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பரிந்துரைத்து செயற்குறிப்பு அனுப்ப மாமன்ற அனுமதிக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 1423/2013/எம்சி3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 53 நாள் 21.05.2013</u>**

பொருள் அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 11**

| | |
|---|---|
| பொருள்: | கோயம்புத்தூர் மாநகராட்சி பள்ளிகள் – மதிய உணவு வழங்குதல் – சூரிய அடுப்பு நிறுவுதல் – மாமன்றத்தின் அனுமதி கோருவது தொடர்பாக. ---- |

கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள பள்ளிகளில் மதிய உணவு வழங்க சூரிய சக்தியில் இயங்கும் சூரிய அடுப்பின் மூலம் (Solar Cooker) சமைக்க உரிய உபகரணங்கள் வாங்கி நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக மாநகராட்சியில் உள்ள 16 மாநகராட்சி மேல் நிலைப்பள்ளிகளில் பரிச்சார்த்த முறையில் சூரிய சக்தியில் இயங்கும் சூரிய அடுப்பு(Solar Cooker) நிறுவி மதிய உணவு சமைத்து பள்ளி மாணவ மாணவிகளுக்கு வழங்கவும், மேற்படி சூரிய அடுப்பு அமைத்து உணவு சமைப்பதால், தற்போது பயன்படுத்தப்பட்டு வரும். LPG கேஸின் பயன்பாட்டினை வெகுவாக குறைக்கலாம்.

எனவே, முதற்கட்டமாக 16 மாநகராட்சி மேல் நிலைப்பள்ளிகளில் சூரிய சக்தியில் இயங்கும் சூரிய அடுப்பு(Solar Cooker) நிறுவுதலுக்கு உத்தேச செலவினத்தொகையாக ரூ.10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதிக்கலாம். ந.க.எண்.4502/13/(கே8)எம்டி5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 54 நாள் 21.05.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 12

சென்னை மாநகரட்சியில் தினக்கூலிகள் மற்றும் குடிசைப் பகுதியில் வாழும் மக்களின் சுகாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் குறிப்பிட்ட இடங்களை தேர்வு செய்து சுகாதாரமான முறையில் உணவு தயாரித்து சலுகை விலையில் தரமான உணவு அம்மா உணவகம் மூலம் வழங்க திட்டமிட்டு முதல் கட்டமாக 200 சிற்றுண்டி உணவகங்கள் திறந்து செயல்படுத்தி வருகின்றது.

கோயம்புத்தூர் மாநகரில் சிறு தொழில் சார்ந்த தொழிலாளர்கள் மற்றும் குடிசைப் பகுதிகளில் வாழ்பவர்களின் வாழ்வாதாரம், உணவுமுறை ஏற்றத்தாழ்வுகள் நிறைந்ததாக உள்ளது. இவர்களுக்கு சுகாதார முறையில் தயாரிக்கப்பட்ட தரமான உணவுகள் குறைவான விலையில் கிடைக்க வாய்ப்பு இல்லை.

தமிழகத்தில் சென்னையைத் தொடர்ந்து ஏனைய மாநகராட்சிகளிலும் இத்திட்டம் தொடங்கப்படுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கோயம்புத்தூர் மாநகராட்சியில் இத்திட்டம் துவக்க முதற்கட்டமாக பத்து இடங்களில் அம்மா உணவகம் அமைக்க அரசு அறிவிப்பு வழங்கியுள்ளதால் ஏற்கனவே ஐந்து இடங்கள் மாமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது மாமன்ற **தீர்மான எண் :- 30 நாள்:- 25.04.2013** மீதமுள்ள ஐந்து இடங்களில் "அம்மா உணவகம்" அமைக்க அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு மதிப்பீடுகள் தயார்செய்யப்பட்டுள்ளது. இதன் விவரம் பின் வருமாறு.

| **வ.எண்** | **இடம்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில்** |
|---|---|---|
| 1. | வார்டு எண் 57 – மசக்காளிபாளையம் ஆரம்பப்பள்ளி வளாகம் | 9.95 |
| 2. | வார்டு எண் 10 - மேட்டுப்பாளையம் பிரதான சாலை மாநகராட்சி பேருந்து நிலையம் | 9.95 |
| 3. | வார்டு எண் 31 - சரவணம்பட்டி சித்ரா நகர் சமுதாயக் கூடம் | 9.95 |
| 4. | வார்டு எண் 89 - சுண்டக்காமுத்தூர் சாலை குனியமுத்தூர் | 25.00 |
| 5. | வார்டு எண் 81 - திருமால் வீதி திருமண மண்டபம் | 9.95 |

மேற்கண்ட இடங்களில் அம்மா உணவகம் அமைக்க உரிய கட்டிடங்களை மாற்றி அமைத்து கட்ட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும் இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு :- அனுமதிக்கலாம். ந.க.எண் 4489/ 2013/ எம்.டி3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 55 நாள் 21.05.2013</u>**

பொருளில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வரிசை எண் 4 சுண்டக்காமுத்தூர் சாலை, குனியமுத்தூர் என்பதற்குப் பதிலாக குனியமுத்தூர் என திருத்தம் செய்தும், அலுவலகக் குறிப்பை அனுமதித்தும் தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 13

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அவிவிருத்திப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்க்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்ட பணியினை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி | | | | | | |
| 1 | 10390/2012/ எம்.டி5 | வார்டு எண் 18 சுண்டப்பாளையம் பகுதியில் ஐ.எஸ்,பி. கழிப்பிடம் கட்டுதல் | 15.00 | 10.04.2013 (மூன்றாவது அழைப்பு) | 1. திரு. ஆர். சுந்தர்ராஜ், கோயம்புத்தூர் 4.27% அதிகம் | திரு. ஆர். சுந்தர்ராஜ், கோயம்புத்தூர் 4.27% அதிகம் |
| 2. | 8141/ 2012/ எம்டி.5 | வார்டு எண் 84 கெம்பட்டி காலனியில் அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் | 5.00 | 18.04.2013 (இரண்டாவது அழைப்பு) | திரு.ஆர் .சுந்தர்ராஜ், கோயம்புத்தூர் 3.95%அதிகம் | திரு.ஆர் .சுந்தர்ராஜ், கோயம்புத்தூர் 3.95%அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3. | 9945/ 2013/ எம்.டி.5 | வார்டு எண் 83 பெரிய கடை வீதி மாநகராட்சி பள்ளிக்கு சத்துணவு மையம கட்டுதல் | 5.00 | 18.04.2013 (இரண்டாவது அழைப்பு) | திருமதி. நபாஷா, கோயம்புத்தூர் 3.99%அதிகம் | திருமதி. நபாஷா, கோயம்புத்தூர் 3.99%அதிகம் |
| 4. | 11858/2 012/ எம்.டி.5 | வார்டு எண் .24 தடாகம் ரோட்டில் வாழைக்காய் மண்டியில் ஐ.சி.டி.எஸ் அறை கட்டுதல். | 9.95 | 18.04.2013 (இரண்டாவது அழைப்பு) | திரு. குருவாயூரப்பன் கோயம்புத்தூர் 4.74%அதிகம் | திரு. குருவாயூரப்பன் கோயம்புத்தூர் 4.74%அதிகம் |
| 5. | 11140/2 012/ எம்.டி.5 | வார்டு எண் 100 ஈச்சனாரி அரசு நடுநிலைப்பள்ளிக்கு சுற்றுசுவர் கட்டுதல் | 3.50 | 09.04.2013 (முதலாவது அழைப்பு) | 1.தி/ள் எ.பி.ஆர் கன்ஸ்டரக்சன்ஸ் கோயம்புத்தூர் 4.03%அதிகம்.<br>2. திரு. வி.சண்முகன் கோயம்புத்தூர் 4.74%அதிகம் | தி/ள் எ.பி.ஆர் கன்ஸ்டரக்சன்ஸ் கோயம்புத்தூர் 4.03%அதிகம். |
| 6. | 1726/ 2012/ எம்.டி.5 | வார்டு எண் 100 மேடூர் அங்கண்ண கவுண்டர் வீதியில் ஆழ்குழாய் கிணறு அருகில் 60000 லிட்டர் மதிப்புள்ள மேல் நிலை நீர் தேக்க தொட்டி கட்டுதல் | 7.50 | 09.04.2013 (முதலாவது அழைப்பு) | 1.தி/ள் எ.பி.ஆர் கன்ஸ்டரக்சன்ஸ் கோயம்புத்தூர் 1.97%அதிகம்.<br>2. திரு.எஸ் ராஜு கோயம்புத்தூர் 3.12%அதிகம். | .தி/ள் எ.பி.ஆர் கன்ஸ்டரக்சன்ஸ் கோயம்புத்தூர் 1.97%அதிகம். |
| பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி | | | | | | |
| 7. | 1604/ 2012/ எம்.டி.5 | வார்டுஎண்8 மீனாட்சியம்மன் நகர் குடிசை பகுதியில் ஐ.சி.டி.எஸ். கட்டிடம் கட்டுதல் | 9.80 | 09.04.2013 (முதலாவது அழைப்பு) | 1.தி/ள். பி.செந்தில் அன் கோ கோயம்புத்தூர் 6.17%அதிகம்<br>2.தி/ள் திருமூர்த்தி கன்ஸ்டரக்சன்ஸ் கோயம்புத்தூர் 4.96%அதிகம் | தி/ள் திருமூர்த்தி கன்ஸ்டரக்சன்ஸ் கோயம்புத்தூர் 4.96%அதிகம் |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண். 10390/12/எம்..டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 56 நாள் 21.05.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி